கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
கலை கலாசார பீடம்
முதலாம் வருடம் முதலாம் அரையாண்டுக் கலைமாணித் தேர்வு - 2014/2015

LIBRARY
04 MAY 2017
EASTERN UNIVERSITY, SRI LANKA

# A CR 1132 Multi - Religious Social Harmony

நேரம் : 02 மணித்தியாலங்கள்

பகுதி I இல் இருந்து இரு வினாக்களுக்கும் பகுதி II இல் இருந்து இரு வினாக்களுக்குமாக மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

## பகுதி - I

1) (அ) சமூக நல்லுறவு என்றால் என்ன? (5 புள்ளிகள்)

(ஆ) இனத்துவம் (Ethnicity) என்பது எவ்வகையில் சமூக நல்லுறவைச் சீர்குலைக்கின்றது என்பதனைச் சுருக்கமாக விளக்குக. (15 புள்ளிகள்)

2) (அ) நீர் கற்ற மனித விழுமியங்களுள் எவையேனும் பத்து(10) விழுமியங்களைப் பட்டியற்படுத்துக. (5 புள்ளிகள்)

(ஆ) மேற்படி மனித விழுமியங்களுள் எவையேனும் ஒன்றினைத் தெரிந்து அது எவ்வகையில் சமூக நல்லுறவுக்கான உந்துதலைச் செய்கின்றது என்பதனை எடுத்துக்காட்டுக. (15 புள்ளிகள்)

3. (அ) நீர் கற்ற பெரியார்களுள் ஒருவரைத் தெரிந்து சமூக நல்லுறவுக்கு அவர் ஆற்றிய பங்களிப்பினைச் சுருக்கமாகத் தருக. (10 புள்ளிகள்)

(ஆ) ஐக்கிய நாடுகள் சபையானது சர்வதேச ரீதியாக சமூக நல்லுறவுக்கு ஆற்றிவரும் பங்களிப்புக்களில் பத்து(10) இனைக் குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

## பகுதி - II

4) நேரிய உளப்பாங்கு (Positive Attitute) எவ்வகையில் சமூக நல்லுறவின் ஊற்றாக அமைகின்றது என்பதனை விளக்குக. (30 புள்ளிகள்)

5) சமயங்கள் சமூக நல்லுறவைச் சீர்குலைக்கின்றனவா? தடுக்கின்றனவா? இவ்விரு தரப்பு வினாக்கள் சார்பாக ஒவ்வொன்றுக்கும் பத்து பத்து விடைகள் அளிப்பதன் மூலம் உமது கருத்தினைத் வெளிப்படுத்துக. (30 புள்ளிகள்)

6) “ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் திருப்பிக்கொடு” என்ற உயரிய சிந்தனையினைக் கடைப்பிடிக்க முயலும் ஒருவர் தற்கால சூழலில் எதிர்நோக்குகின்ற சவால்களை ஆராய்க. (30 புள்ளிகள்)